**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure) In the Court of**

**III Additional District & Sessions Judge(PCR),**

**III Additional District & Sessions Court (PCR), Madurai.**

| | | |
|---|---|---|
| **Special Sessions Case No.** | : | 41/2019 |
| **Deposition of witness for** | : | **PW. 18 (LW. 29 )** |
| **Name** | : | ஜெயமணி |
| **Father's / Husband's Name** | : | தர்மராஜ் |
| **Village / Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.07.2026.**

**( 1,3,6,7,11,13 வது எதிரிகள் ஆஜரில்லை. 1,3,6,7,11,13 வது எதிரி சார்பில் பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனுத்தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர் )**

**விசாரணை தொடங்கிய நேரம் 12.35 p.m**

**முதல் விசாரணை**

1. நான் காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 2022 ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வு பெற்றேன். நான் சமயநல்லூர் காவல்நிலையத்தில் 2014 ஆம் ஆண்டு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து நிலையப்பொறுப்பில் 22.04.2014 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு இருந்தபோது சமநல்லூர் காவல்நிலைய எல்கைக்குட்பட்ட டபேதார் சந்தை பகுதியில் வசிக்கும் சித்திரைப்பூ மகன் சதீஸ்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று

அப்புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 110/2014 பிரிவு 147, 148, 294(b), 323,324, 307 இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து மதுரை 4வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இதர முதல்தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இதன் தொடர்ச்சியாக டபேதார் சந்தையில் வசிக்கும் குருசாமி மனைவி பிச்சையம்மாள் என்பவர் அன்றைய தினமே 21.30 மணிக்கு கொடுத்த புகார் மனுவை பெற்று அதனடிப்படையில் நிலைய குற்ற எண். 111/2014 , பிரிவு 147, 148, 294(b), 323,324, 307 ,இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து மதுரை 4வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இதர முதல்தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். 02.11.2015 அன்று மாலை 17.45 மணிக்கு அதே காவல்நிலையத்தில் நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது டபேதார் சந்தையைச்சேர்ந்த சித்திரைப்பூ மகன் மகாலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதனடிப்படையில் நிலைய குற்ற எண். 428/2015, பிரிவு 147, 148, 294(b), 323,324, 506(2) இதச உ/இ 3(1)(X) SC/ST Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கையையும், புகார் மனுவையும் இணைத்து மதுரை 3வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை புலன் விசாரணைக்காக சமயநல்லூர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளரின் பார்வைக்கு வைத்தேன். இதர முதல்தகவல்

அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இது தொடர்பாக என்னை காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பதிவு செய்த குற்ற எண். 428/2015 வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. முத்திருளனின் அம்மா, அப்பா மற்றும் தம்பிகள் 428/2015 வழக்கில் எதிரிகளாக உள்ளார்கள். குற்ற எண். 428/2015 வழக்கின் புகார்தாரருக்கும், இறந்த குடும்பத்திற்கும் இந்த சம்பவத்திற்கு முன்பாகவே சொத்து சம்பந்தமாக எந்த பேச்சு வார்த்தையும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குற்ற எண். 428/2015 வழக்கில் புலன் விசாரணைக்கு பின் விஜய் என்பவர் குற்றம்சாட்டப்பட்டவர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் அதுபபற்றி எனக்கு தெரியாது.

**<u>4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

குற்ற எண். 110/2014 மற்றும் 111/2014 இரண்டுமே எதிர் எதிர் வழக்குகள் என்றால் சரிதான். அந்த வழக்குகளில் ஒருதரப்பினர் இந்து பறையர் சமூகத்தை சேர்ந்தவர்களும், மறுதரப்பினர் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவர்களும் என்றால் சரிதான். அந்த வழக்குகளின் அடிப்படை மூக்கையாவை பார்த்து தமிழக அரசு வழங்கும் மிக்சி, கிரைண்டரை வாங்கி கொடுக்க முடியாத நீயெல்லாம் ஒரு வார்டு கவுன்சிலரா என கேட்டதுதான் என்றால் புகாரில் அவ்வாறுதான் உள்ளது.

**7, 9, 14,வது எதிரிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுகொள்கிறார்கள்.**

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–
அமர்வு நீதிபதி,
மூன்றாவது கூடுதல் நீதிமன்றம்(பி.சி.ஆர்),
மதுரை.